19th November 1963]

தொழில் பேட்டை ஆரம்பிக்க அனுமதி வேண்டுமென்று கோரி விண்ணப்பம் வந்திருக்கிறதா? அவ்வாறு கோரிக்கை வந்திருந்தால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கூட்டுறவு துறையில் வைப்பதற்கு யார் முன் வந்தாலும் எந்தவித ஆட்சேபணையும் இல்லாமல் அனுமதி கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராய் இருக்கிறது. சர்க்காரின் செலவில் வைக்கவேண்டுமென்று சொன்னால்தான் அதைப் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கும். அதுவும நிதி நிலைமையைப் பொறுத்தது. நாங்குநேரியில் இருந்து இதுவரையில் அந்தமாதிரி கோரிக்கை வந்ததாகத் தெரியவில்லை.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: தொழில்பேட்டை மாதிரி சிறுசிறு சர்வீஸ் சென்டர்களை ஆங்காங்கே ஏற்படுத்த உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர் வெங்கட்டராமன்: இப்போது ஒவ்வொரு ப்ளாக்கிலும் கார்ப்பென்டரி, ஸ்மித்தி பயிற்சி கொடுக்கிறோம். சில இடங்களில் ஜெனரல் என்ஜினீயரிங் வொர்க்ஷாப் வைத்து பயிற்சியும் அளிக்கிறோம். இதைத்தவிர வேறு கிடையாது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் தலைவர் அவர்களே, தொழிற்பேட்டையில் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு நல்ல விளம்பரம் தேடும் முறையில் சென்னையில் ஒரு கண்காட்சி சாலை ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்போது கிண்டியில் இருக்கிற தொழிற்பேட்டையில் ஷோ ரூமில் அங்கே உற்பத்தி செய்யப்படுகிற பண்டங்கள் ஒவ்வொன்றும் டிஸ்ப்ளே முறையில் வைக்கப்பட்டிருக்கிறது. இப்போது அங்கே உற்பத்தியாகிற பண்டங்கள் உற்பத்தி ஆவதற்கு முன்னமேயே விற்றுக்கொண்டிருப்பதனால் கனம் எதிர்கட்சித் தலைவர் சொல்கிற அளவுக்கு முயற்சிகள் எடுக்கப்படவில்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி: தொழிற்பேட்டையில் இருக்கக்கூடிய கட்டிடங்களில் கைத்தறி நெசவாளர்கள் அனுமதிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கைத்தறித்தொழிலுக்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது. அவர்களுக்குத் தனியாகத் திட்டம் இருக்கிறது.

*278 **கேள்வி.—திரு. கரு. சிமைச்சாமி:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிவகெங்கையில் ஆரம்பிக்க இருக்கும் தொழிற்பேட்டை எப்போது ஆரம்பிக்கப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சிவகெங்கையில் தொழிற்பேட்டை ஏற்படுத்தும் திட்டத்திற்கு 1963 மார்ச் மாதத்தில் அனுமதி வழங்கப்பட்டது. அதற்கான பூர்வாங்க வேலைகள்

[19th November 1963

இப்போது நடந்து வருகின்றன. 1964-ம் ஆண்டு இறுதிக்குள் மேற்படி தொழிற்பேட்டை செயல்படத் துவங்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

சுற்றுலா விடுதிகள்

*279 **கேள்வி.—திரு. முனு ஆதி:** கனம் செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தமிழ் நாட்டில் எங்கெங்கு Tourist Home- கள் கட்டப் பட்டுள்ளன?

(இ) மேலும் எங்கெங்கு கட்ட உத்தேசம்?

(உ) இவைகள் எந்த அடிப்படையில் கட்டப்படுகின்றன?

கனம் திரு. கோ. பூவராகன்: (அ) ஏற்கனவே மத்திய அரசாங்கத்தனகீழ் மகாபலிபுரத்தில் உள்ள சுற்றுலா மாளிகை யைத் தவிர, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களில் மத்திய அரசாங்கத்தாலும், குற்றாலம், நாகர்கோவில், மதுரை, திருச்சிராப்பள்ளி, உதகமண்டலம் ஆகிய இடங்களில் தமிழ்நாடு அரசாங்கத்தாலும் சுற்றுலா மாளிகைகள் கட்டப் பட்டுள்ளன.

(இ) மகாபலிபுரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, குற்றாலம் ஆகிய இடங்களில் கூடுதலாக ஒவ்வொரு சுற்றுலா மாளிகையும், கொடைக்கானல், காஞ்சிபுரம், ராமேஸ்வரம், ஒக்கேனக்கல், திருவண்ணாமலை, கன்னியாகுமரி, சுருளி ஆகிய இடங்களில் புதிதாக ஒவ்வொரு சுற்றுலா மாளிகையும் கட்ட உத்தேசிக்கப் பட்டிருக்கிறது.

(உ) வெளிநாட்டு, உள்நாட்டு உல்லாசப் பிரயாணிகள் மற்றும் யாத்ரீகர்களுடைய எண்ணிக்கை, அவர்களுடைய தேவைகள், ஏற்கனவே உள்ள வசதிகள் முதலியவற்றைக் கருத்திற்கொண்டு அவர்களைக் கவரும் இடங்களில் சுற்றுலா மாளிகைகள் கட்டப்படுகின்றன.

திரு. சா. கணேசன்: காரைக்குடி ஒரு முக்கியமான பகுதியாக இருப்பதினாலும் பல்வகை கல்லூரிகள், ஆராய்ச்சிக்கூடம் முதலியன விளங்குவதனாலும் பல ஆண்டுகளாக அங்கே சுற்றுலா மாளிகை அமைக்கப்படவேண்டுமென்ற விண்ணப்பம் வந்து கொண்டிருப்பதனாலும், அங்கே ஒரு சுற்றுலா மாளிகையை அரசாங்கம் கட்டித் தருமா? கட்டித்தரும் என்றால் எப்போது செயல்படத் தொடங்கும்.

கனம் திரு. கோ. பூவராகன்: அதுபற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. முனு ஆதி: பெருவாரியாக நம் நாட்டில் ஏழை மக்களே அதிகமாக இருப்பதனால் இந்தச் சுற்றுலா மாளிகையில் அவர்கள் தங்க முடியாது போகிறது. காரணம் வாடகை அதிகமாக